அவர்கள் குறைந்த பட்ச சில தேவைகளை, கோரிக்கைகளை வைத்து அரசாங்கத்தில் முறையிட்டால் உடனடியாக அந்தக் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்கேற்ற பரிகாரங்களைத் தேடிக் கொடுக்க வேண்டும். உரிய பரிகாரம் காணப்படவில்லை என்றால் இம்மாதிரி வேலை நிறுத்தம் ஏற்படுவதை தவிர்க்க முடியாமல் போய்விடும். ஆக, இனிமேலாவது கோரிக்கைகளுக்கு உடனடியாகப் பரிகாரம் தேடித்தர வேண்டும். இன்றையதினம் ஏற்பட்டிருக்கிற இந்த வேலை நிறுத்தத்தினால் எந்த அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற பல்வேறு கருத்துக்களை விவாதிப்பதற்காக பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே எழுப்பப்பட்டுள்ள இந்தப் பிரச்சினையில் அடங்கியுள்ள முக்கியத்துவத்தை அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது. ஆனால் அதனுடைய விவரங்களை பேரவை உறுப்பினர்கள் அறிவார்களேயானால் அந்த வேலை நிறுத்தம் எவ்வளவு அவசரப்பட்டு, எந்தவிதமான விளக்கமும் அரசாங்கத்திடம் பெற முயற்சி செய்யாமல், அசராங்கத்தோடு கலந்து பேசாமல், இப்போது மார்ச் மாதம் என்ற காரணத்தால் இந்த நேரத்தைத் தவிர வேறு நேரம் வாய்ப்பு இராது என்று கருதி 18–ந் தேதி திடீரென்று வேலை நிறுத்தம் நடைபெற்றது என்பதை அவையினர் காணக்கூடும். முதலில் சில விவரங்களைக் கூறுகிறேன்.

மனையக மருத்துவர்கள் (ஹவுஸ் சர்ஜன்ஸ்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு 5—3—1975–ஆம் நாளன்று சில கோரிக்கைகள் அடங்கிய முறையீடு ஒன்றை அனுப்பியிருக்கிறார்கள்.

(1) வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்த்து வேலையில்லாதுள்ள மருத்துவர்கள் அனைவரையும் உடனடியாகப் பணியில் நியமித்தல்;

(2) மனையக மருத்துவர்களின் பயிற்சி உதவித் தொகையை திங்களொன்றுக்கு ரூ. 350 ஆக உயர்த்துதல்;

(3) மருத்துவப் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு திங்களொன்றுக்கு ரூ. 500 பயிற்சி உதவிக் தொகை வழங்கல் என்ற இந்த மூன்று கோரிக்கைகளை அனுப்பியிருக்கிறார்கள்.

மனையக மருத்துவர்கள் 18—3—1975–ஆம் நாளன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யப் போவதாக 17—3—1975–ஆம் நாளன்று மாலையில் அறிவிப்புக் கொடுத்தனரென்று மருத்துவ மனைகளின் தலைவர்கள் மருத்துவக் கல்வி இயக்குனருக்குத் தெரிவித்தனர். மனையக மருத்துவர்கள் 18—3—1975–ஆம் நாள் முற்பகல் வேலை நிறுத்தம் செய்தனர். 17–ந்தேதி மாலையில் அறிவித்துவிட்டு 18-ம்தேதி முற்பகல் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றால் மாணவர்கள் எவ்வளவு பொறுப்புடன் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.